**லங்காபுர பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லங்காபுர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஊழியர் கடன் மீதி ரூபா 62,305 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத உத்தியோகத்தர் முற்பண மீதி ரூபா 36,000 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | தீர்க்கப்படாத உத்தியோகத்தர் முற்பண மீதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | சரியாக கணக்கு வைக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டிற்குரியதாக இனங்காணப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 683,416 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய அனைத்து வருமானங்களும் உரிய முறையில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டின் போது இந்த வழுவினை திருத்தி உரிய சீராக்கங்களை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கின்றேன். அத்துடன், ஆண்டிற்குரிய குறித்துரைக்கப்பட்ட நீதிமன்ற தண்டப்பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | | பெற்றுக்கொள்வதில் மிகவும் சிரமம் காணப்படுகின்றது. |
| (iv) | பிரதேச சபையின் ஜயபிம பொது மயானம் 138 காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | அனைத்து சொத்துக்களும் 2019 ஆம் ஆண்டினுள் மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்கு வைக்கப்படுவதாக உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (v) | மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணங்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | திட்டவட்டமான பெறுமதியினை உறுதிப்படுத்த முடியாமையால் ஒதுக்கீடொன்றினை மேற்கொள்ளவில்லை என்பதை குறிப்பிடுகின்றேன். |
| (vi) | மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரையிலும் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய அனைத்து வருமானங்களும் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டின் போது திருத்துமாறு உத்தியோகத்தர்களுக்க அறிவித்துள்ளதுடன், உரிய முத்திரைக் கட்டண பெறுமதியை திட்டவட்டமாக இனங்காணுவதில் சிரமம் காணப்படுகின்றது. |
| (vii) | பிபிதெமு பொலன்னறுவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டினுள் நிறைவேற்றப்பட வேண்டிய 13 செயற்திட்டங்களுக்குரிய திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய பட்டியல்களின் பெறுமதி ரூபா 7,545,410 தொகை வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர் இன் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் உரிய முறையில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (viii) | மீளாய்வாண்டில் குறுக்குப் பதிவுகளினூடாக | மீளாய்வாண்டின் செலவினமத் | திருத்திக்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கப்பட்ட செலவினம் ரூபா 2,465,410 தொகை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உத்தியோகத்தர் முற்பணப் பதிவேட்டின் மீதி ரூபா 113,225 ஆன போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 20,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால், ரூபா 93,225 ஆன வேறுபாடொன்று நிலவியது. | உத்தியோகத்தர் முற்பண பதிவேடுகளை நாளதுவரையாக்க வேண்டியதுடன், சரியான தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | திருத்திக்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 31 கட்டிட மீதிகளுக்குரிய பட்டோலைகளில் காணப்படும் பெறுமதிகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 1,646,466 ஆன வேறுபாடு நிலவியது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன், சரியான பெறுமதி பதிவு செய்யப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை திருத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| (iii) | நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈட்டத்திற்கான வருமானத்திலாக பங்களிப்பு கணக்குகளுக்கிடையே ரூபா 6,401,694 ஆன வேறுபாடு நிலவியது. | வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டு திருத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 5,325,526 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 14 காணிகளுக்காக உரித்தினை சான்றுபடுத்த வேண்டிய ஆவணங்கள் காணப்படவில்லை. நிலுவைப் பெறுமதியை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் இல்லாதிருந்தமையாலும், ஊழியர் பிணை வைப்புப் பதிவேடொன்று பேணப்படாதிருந்தமையாலும், அந்த பதிவேட்டினை 2019 ஆம் ஆண்டு முதல் பேணிச் செல்ல அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| **(அ)** | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 192(2) | - | சபையினால் நடாத்திச் செல்லப்படும் அரிசி மா உற்பத்தி வெதுப்பகம், விற்பனை நிலையம் மற்றும் விடுமுறை விடுதிக்காக அமைச்சரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வியாபார மற்றும் கைத்தொழில் முயற்சிகளுக்காக அமைச்சரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | ஆளுநரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | 134 ஆம் பிரிவு | - | 2012 ஒக்தோபர் 31 அந் திகதியில் உள்ளபடியான | கல்பொத பிரதேசத்தில் வீதவரியினை | 2017 ஆகஸ்ட் 18 ஆந் திகதி மதிப்பீட்டினை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கல்பொத்த நகரினை அபிவிருத்தியடைந்த பிரதேசமொன்றாக வர்த்தமானியில் அறிவித்து 2013 நவம்பர் 28 ஆந் திகதி அந்த பிரதேசத்தில் வீதவரி அறவிடுவதற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட் 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி விடயப்பொறுப்பு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் வீதவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுகக்கப்பட வேண்டும். | குறிப்பிட்டு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எழுத்துமூலம் மற்றும் வாய்மொழிமூலம் இது தொடர்பில அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ)** | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின 23(அ) பிரிவு | - | சபையின் அதிகாரப்பிரதேசத்திற்குரிய 17 கைத்தொழில்களின் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் காலாவதியடைந்து 04 முதல் 07 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பொருத்தமான கைத்தொழில்கள் இனங்காணப்பட்ட புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் இல்லாது மேற்கொள்ளப்படும் கைத்தொழில்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23(அ) பிரிவின் பிரகாரம் செயற்படுமாறும், சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் காலாவதியடைந்துள்ள கைத்தொழில்களுக்காக பரிசோதித்து புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதங்கும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| **(இ)** | 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவை<br>---------------------------- | | | | |
| (i) | 59 – 63 ஆம் விதி | - | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் மதிப்பாய்வென்றினை மேற்கொண்டு கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குரிய மதிப்பாய்வென்றினை மேற்கொண்டு கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பான பட்டியல் ஒவ்வொரு வருடத்தினதும் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் மதிப்பாய்வினை மேற்கொண்டு பதிவேடொன்றினை வருடாந்தம் தயாரிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | 203 ஆம் விதி | - | 2019 மே 31 ஆந் திகதி வரையிலும், 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வொன்று உரிய காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நான்கு வாசிகசாலைகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு பணிகள் கணக்காய்வு திகதி வரையிலும், நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், ஏனைய பிரிவுகளின் பொருள் மெய்மையாய்வுகள் எதிர்வரும் சில் வாரங்களினுள் நிறைவு செய்வதாக அறிவிக்கின்றேன். |
| **(ஈ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>---------------------------- | | | | |
| | 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் | 215,225 | பணி நிறைவடைந்து 10 நாட்களினுள் பெற்றுக்கொண்ட முற்பணத் தொகை | பெற்றுக்கொள்ளப்படும் முற்பணங்கள் உரிய காலத்தில் தீர்க்கப்பட வேண்டும். | பணி நிறைவடைந்ததும், முற்பணத் தொகைகளை தீர்க்குமாறு மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) | | தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் மற்றும் முன்னை ஆண்டுகளில் 10 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 215,225 பெறுமதியான முற்பணங்கள் ½ முதல் 43 ½ மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | | முற்பணங்களை தீர்ப்பனவு செய்யாத உத்தியோகத்தர்களுக்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 751 | 142,900 | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 142,900 பெறுமதியான பொருட்கள், பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்படும் அனைத்து பொருட்களும் பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது. |
| **(உ)** | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை<br>-------------------------- | | | | |
| | 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய NCP/PL/AC/04/01/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | 33,535 | அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையினை மிகைத்து மீளாய்வாண்டின் சனவரி முதல் மார்ச் வரையான காலப்பகுதிக்குரியதாக செயலாளரால் பயன்படுத்தப்பட்ட வாகனத்திற்காக 353 லீட்டர்கள் டீசலுக்காக ரூபா 33,535 செலவிடப்பட்டிருந்தது. | எரிபொருள் பாவனை உரிய எல்லையினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அதிகாரப்பிரதேசத்தின் கடமைகள் மற்றும் பிரதேசத்திலிருந்து புறம்பாக கடமைகளில் ஈடுபடுவதற்காக எரிபொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிரதேசத்தின் அபிவிருத்தி பணிகள் பெருமளவில் இடம்பெறுகின்றமையும், அந்த செயற்திட்டத்தினை மேற்பார்வை செய்ய இந்த வாகனத்தை பயன்படுத்த நேர்ந்தமையும் தாக்கமளித்திருந்தது. |

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 03 பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,607,190 ஆக இருந்ததுடன், நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள இந்த பணத்தை அறவிடுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொலிசுக்கு முறைப்பாடு செய்துள்ளதுடன், விசாரணைகளின் பிரகாரம் குத்தகையாளர்களில் ஆறுபேரால் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்9கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று குத்தகையாளர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். அறுவர் பதிவினை கைவிட்டுச் சென்றுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | 11 வருடங்கள் முதல் 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாத பயன்பாட்டு சேவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 117,194 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்ப்பனவு செய்ய வேண்டிய கணக்கீட்டு குறைபாடுகள் மற்றும் பதிவளிக்க வேண்டிய மீதிகள் தொடர்பான அறிக்கையொன்று அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,134,193 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,566,537 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 70,000 | 81,750 | 81,750 | - | 250,020 | 85,000 | 85,000 | - |
| வாடகை | 6,955,286 | 9,771,470 | 9,602,530 | 2,232,265 | 11,609,867 | 11,814,778 | 11,738,578 | 2,638,209 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,307,000 | 1,959,890 | 1,959,890 | - | 1,330,650 | 1,267,075 | 1,267,075 | - |
| ஏனைய வருமானம் | 14,484,470 | 18,311,502 | 14,133,660 | 7,363,801 | 15,877,095 | 11,391,592 | 6,413,207 | 5,355,702 |
| மொத்தம் | 22,816,756 | 30,124,612 | 25,777,830 | 9,596,066 | 29,067,632 | 24,558,445 | 19,503,860 | 7,993,911 |

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 29,067,632 ஆன போதிலும், மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 22,816,756 ஆனமையால் அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 21 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. | மதிப்பிடப்பட்ட வருமானம் குறைவடைவதற்கு தாக்கமளித்த காரணங்களை தேடிப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆண்டின் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது கடந்த சில வருடங்களில் உள்ளபடியான வருமானத்தை அடிப்படையாக கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ்வாறானடிதாரு அடிப்படையின்றி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வரி வருமானம் ரூபா 81,750 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டினை விட 3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டினுள் கூடுதலான வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வாடகை வருமானம் ரூபா | நிலுவை வாடகை வருமானத்தினை துரிதமாக அறவிடுவதற்கு உரிய | நீண்ட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 2,232,265 தொகையான |

| | | |
|---|---|---|
| 2,232,265 தொகை நிலுவையாக காணப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வாடகை வருமானத்தினை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரின் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,980,599 மற்றும் முத்திரைக் கட்டணமான ரூபா 2,282,173 ஆகும். | அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ஆகியவை சபைக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்களின் பெறுமதி காலப்பகுதிக்குரிய பெறுமதியாவதுடன், கால அடிப்படையில் அந்த செயற்திட்டங்கள் அபிவிருத்தி திட்டத்திற்காக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையின் அதிகாரப்பிரதேசத்தினுள் வகைப்படுத்தப்படாது குப்பைகள் சேகரிக்கப்படுகின்றமையால் நாளாந்தம் 02 தொன்களுக்கு மேற்பட்ட குப்பைகளின் அளவானது பிலிசரு நிலையத்திலுள்ள ஊழியர்களை ஈடுபடுத்தி வகைப்படுத்துவதற்கு மேலதிக கிரயமொன்றினை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | குப்பைகளை வகைப்படுத்தி சபைக்கு கையளிப்பதற்கு மக்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வகைப்படுத்தப்பாத குப்பைகள் பெற்றுக்கொள்வதனை மறுத்தல் மற்றும் குப்பைகளை முறையற்ற விதத்தில அகற்றுபவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் சடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | பிலிசறு நிலையத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் | கேள்விக்கு பொருந்தக்கூடிய | பிலிசறு நிலையத்திற்காக மேலதிக |

| | | | |
|---|---|---|---|
| | இடவசதி போதுமானதாக இல்லாதிருந்தமை காரணமாக உக்கிப் போயுள்ள சேதனப் பசளைளை தூளாக்க முடியாமையின் அடிப்படையில் நாள்தோறும் உரத்தினை விற்பனை செய்ய முடியாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | வகையில் பபசளை உற்பத்தியினை மேற்கொண்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு நடடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | களஞ்சியமொன்றினை நிர்மாணிப்பதற்கும், சபையிக் நிதியத்தில் நிதி இல்லாதிருந்தமையால் உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து நிதி கோரப்பட்டுள்ளது. |
| **(ஆ)** | **நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்** | | |
| (i) | ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் சபை அறிந்திருந்த போதிலும், அந்த நோக்கங்களிடையே சபைக்குரிய நோக்கங்கள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்கள் இனங்காணப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (ii) | பாதீட்டினை தயாரிக்கும் போது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBD/4/1/2-2018 சுற்றறிக்கையில் அஅறிமுகப்படுத்தப்பட்டிருந்த குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | அறிவுரைகளுக்க மைய செயற்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (iii) | இலக்குகளை அண்மிக்கும் போது உரிய பணிகளை கண்காணிப்பதற்கான அடைவுகள் இனங்காணப்பட்டிராதமையால், குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (iv) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இனங்கண்டு நிதியேற்பாடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (v) | இலக்குகளை அண்மிப்பதற்காக நிறுவனத்தின் பதவியணியை பயிற்றுவிக்கும் நடைமுறையொன்று காணப்படாமையால், நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் தொடர்புகொள்ள வேண்டிய ஏனைய அரச நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |

**(இ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாணடிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த 60 நிகழ்ச்சித்திட்டங்களில் 21 நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டத்தினூடாக இனங்காணப்பட்ட அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தையும் நிர்மாணிப்பதற்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் அதிகாரப்பிரதேசத்தினுள் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தற்காக விண்ணப்பத்தினை பெற்றுள்ள 13 தொழிற்சாலைகளிலிருந்து 06 இன் பரிசோதனை அறிக்கைகள் வெளியிடப்பட்டு 06 முதல் 08 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பொருத்தமான நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்கி கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்கக்கூடிய கைத்தொழில்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும், ஏனைய தொழிற்சாலைகளுக்குரிய சட்டங்கள், விதிகளுக்கமைய செயற்படுவதற்கும், சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படும் வகையில் நடாத்திச் செல்லப்படும் கைத்தொழில்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்காக 86 விளம்பர பலகைகளுக்காக அறவிடப்பட வேண்டிய வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விளம்பரங்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அத்தியாவசியமற்ற அறிவித்தல் பலகைகளை கழற்றி அகற்றுவதற்கு மற்றும் அறவிடப்படவுள்ள அறிவித்தல் பலகை கட்டணங்களுக்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் இது வரையிலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **(இ)** | மீளாய்வாண்டினுள் கிடைத்த அனைத்து வைப்புகளையும் உள்ளடக்கி வைப்புகள் பேரேட்டினை நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலுத்தப்படாதுள்ள வைப்பு மீதியினை தெளிவாக இனங்காண முடியாதிருந்தது. | வைப்புகள் பேரேட்டினை நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டும். | வைப்புகள் பேரேட்டினை நாளதுவரையாக பேணிச் செல்லுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| **(ஈ)** | வாகனத்தின் உரித்தினை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டினுள் அந்த வாகனத்தை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் மூன்றாம் நிலையிலுள்ள செயலாளர் பதவி வெற்றிடமாக உள்ளதுடன், மீளாய்வாண்டின் யூலை மாதம் முதல் பதிற்கடமை செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவியணியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இரண்டாம் நிலையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 04, 03 நூலகர் பதவிகள், முகாமைத்துவ உதவியாளர் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை | பதவியணியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | பதவியொன்று மற்றும் தளப் பரிசோதகர் பதவியொன்று எனும் படியாக 09 பதவிகளின் வெற்றிடம் நிலவியது. | எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | ஆரம்ப நிலைக்குரிய ஆயர்வேத மருந்து கலப்பவர் பதவியொன்று, அலுவலக உதவியாளர் பதவியொன்று, 03 வாசிகசாலை தொழிலாளர் பதவிகள், கள தொழிலாளர் பதவியொன்று, குழாய் பொருத்துநர் பததவியொன்ற மற்றும் சுகாதார தொழிலாளர் பதவியொன்றுமாக 08 பதவி வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவியணியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள புலஸ்திகல மற்றும் தம்பால நகரங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய நிலப்பிரதேசம் அளவிடப்பட்டு திட்டங்களை தாயரிப்பதற்கு சபை தவறியிருந்தது. | அபிவிருத்தி செய்யப்பட்ட பிர தேசங்களாக இனங்காணப்பட்டு ள்ள பிரதேசங்களில வீதவரியினை அறவிடுவதற்கு துரதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | புலஸ்திகல மற்றும் தம்பால நகரங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய பிரதேசங்களாக மாற்றுவதற்கு அதற்குரிய நிலப்பிரதேசம் இனங்காணப்பட்டு அளவிடல் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 06 வாகனங்களை கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்களை கைத்தவிர்ப்பதற் கு நடடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கைத்தவிர்ப்பு செய்ய வேண்டிய சொத்துக்களை கைத்தவிர்ப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுமதி ரூபா 233,575 கூட்டுத்தொகையான பிலொக் கற்கள் உற்பத்தி இயந்திரம், கொன்கிறீட் கலவை, புரொஜெக்டர் மற்றும் தலகம்பகய விளைவற்றுக் காணப்பட்டது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். | கைத்தவிர்ப்பு செய்ய வேண்டிய சொத்துக்களை கைத்தவிர்ப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

**3.5.2 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் மூலதனமாக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,104,403 தொகை நிலையான சொத்துக்கள் பதிவேட்டினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினுள் உள்ளடக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினேன். |

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டினுள் பெக்கோ லேடர் சபையின் நடடவடிக்கைகளுக்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாது 184.4 மீட்டர் மணித்தியாலங்களுக்காக ரூபா 3,500 படி ரூபா 645,400 ஆன வருமானம் பெற வேண்டிய போதிலும், வருமானமாக அறவிடப்பட்டுள்ளது ரூபா 458,010 மாத்திரமே ஆகும். இந்த வேறுபாட்டிற்கான காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை. | வேறுபாட்டிற்கான காரணங்கள் பரிசோதிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 28.2 மீட்டர் மணித்தியாலங்கள் பதிவு செய்யப்பட்டிராததுடன், பிரதியெடுப்பதில் 4.9 வழுக்கள் மற்றும் பழுதுபார்த்தலொன்று மற்றும் சேவைப்பார்த்தலுக்காக 30.1 மணித்தியாலங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | கடைகளை வாடகைக்கு வழங்குவதுடன் தொடர்புடையதாக மொத்தத் தொகையையும் செலுத்தியதாக போலியான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 901,500 இல் பெறப்பட்டுள்ள ஆரம்ப வைப்புகள் (முநல அழநெல) பெறுமதி ரூபா 355,000 ஆக இருந்ததுடன், ரூபா 566,500 தொகையான பிணை | ஆரம்ப வைப்புப் பணத்தினை பெற்றுக்கொண்ட தன் பின்னர் சொத்துக்கள் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டியதுடன், நிலுவைப் பணம் அறவிடப்பட | நிலுவை வைப்புப் பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்க அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| அறவிடப்பட்டிருக்காததுடன், நிதிக்கூற்றுக்களினுள்ளும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் போதியளவான உள்ளக கணக்காய்வு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | போதியளவான உள்ளக கணக்காய்வினை மேற்கொள்ள வேண்டும். | 2019 ஆம் ஆண்டு உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய பிரதான செயலாளரின் என்சீபீ/சீஏ/01 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் 2016 மே 11 ஆந் திகதிய கடித்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒரு தடவையும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் உரிய முறையில் நடாத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடாத்தப்படுமென அறிவிக்கின்றேன். |